**செய்தி வெளியீடு எண்: 550** **நாள்: 01.11.2015**

## <u>செய்தி வெளியீடு</u>

வடகிழக்கு பருவமழை தற்பொழுது தமிழகம் எங்கும் பரவலாக தொடர்ந்து பெய்து வருகிறது. தமிழ்நாடு அரசு வருவாய்த்துறையின் சார்பில் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள் இன்று (01.11.2015) காலை வருவாய் நிருவாக ஆணையர் அலுவலக வளாகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின்போது முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் திரு. அதுல்ய மிஸ்ரா இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை இணை ஆணையர் திருமதி. ஆர். லில்லி இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. இ. சுந்தரவல்லி இ.ஆ.ப., சென்னை மாநகராட்சியின் தலைமைப் பொறியாளர் (சிறப்புப் பணிகள்) திரு. பாபு இராஜேந்திரன் பேரிடர் மேலாண்மை இணை இயக்குநர் திரு. ச. கந்தசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இம்மையத்தில் மாவட்டங்களிலிருந்து நாள்தோறும் பெறப்படும் மழையின் அளவு, கன மழையை எதிர்கொள்ள மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறிப்பாக, தென் மாவட்டங்களில் பெய்து வரும் தொடர் கனமழையின் காரணமாக ஏற்பட்டுள்ள சேதங்கள், பாதிக்கப்பட்டுள்ள குடிசைகள், வீடுகள், மனித மற்றும் கால்நடை உயிரிழப்புகளின் விவரங்கள் குறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பெயரில் தொடர் மழை பெய்து வரும் பகுதிகளில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அலுவலர்களும் விரைந்து சென்று போர்க்கால அடிப்படையில், மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளை பார்வையிட்டு வருவதோடு மட்டுமின்றி, பாதிக்கப்பட்டோருக்கான உரிய நிவாரண உதவிகளையும் விரைந்து வழங்கி வருகிறார்கள்.

குறிப்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், பேரிடர்களின் போது உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரண உதவித் தொகையினை 2.50 லட்சம் ரூபாயிலிருந்து 4 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் கால்நடைகள் இழப்பிற்கு வழங்கப்படும் உதவித் தொகையினை 20,000/– ரூபாயிலிருந்து 30,000/– ரூபாயாக உயர்த்தியும், ஆடுகள் இழப்பிற்கு வழங்கப்படும் உதவித் தொகையானது 2,000/– ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தியும், பகுதியாக சேதமடையும் குடிசைகளுக்கு உதவித்தொகையானது 2,500/–ரூபாயிலிருந்து 4,100/–ரூபாயாகவும் உயர்த்தி வழங்கிடவும், முழுமையாக சேதமடைந்த குடிசைகளுக்கு 5,000/– ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டு உள்ளார்கள். அதனடிப்படையில் இந்த நிவாரண உதவிகள் அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

**"இயற்கை பேரிடர்கள் நிகழும் காலங்களில் மக்களை நாடிச் சென்று உதவிக்கரம் நீட்டுவதோடு, நிருவாகத்தின் முதுகெலும்பாக தொடர்ந்து விளங்கிடும் துறையே வருவாய்த்துறை"** என்றுமாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருவாய்த் துறையின் செயல்பாடுகள் குறித்து மிகவும் பெருமையாக குறிப்பிட்டு உள்ளார்கள். அதனை வருவாத்துறை அலுவலகர்கள் அனைவரும் நினைவில் கொண்டு, உரிய உடனடி நிவாரண நடவடிக்கைகளை பிற துறைகளுடன் இணைந்து, கால தாமதமின்றி வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**